# இலண்டன் தமிழ் நிலையம் - திருக்குறள் போட்டி 2023

## இ பிரிவு

| இ பிரிவு | ஆண்டு 2, ஆண்டு 3 | Year 2, Year 3 |
|---|---|---|

(திருக்குறளை மட்டும் மனனம் செய்யவும்)

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார் – 03

*மனமாகிய மலர்மீது சென்று இருப்பவனாகிய கடவுளின் சிறந்த திருவடிகளை எப்போதும் நினைப்பவர் இப்பூமியில் நெடுங்காலம் வாழ்வர்.*

They who are united to the glorious feet of Him who passes swiftly over the flower of the mind, shall flourish long above all worlds.

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து – 90

*அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும்: அதுபோல் முகம் மலராமல் வேறு பட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பார்.*

As the Anicham flower fades in smelling, so fades the guest when the face is turned away.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை

நாடி இனிய சொலின் – 96

*பிறர்க்கு நன்மை தரும் இனிய சொற்களை மனத்தால் எண்ணிச் சொன்னால், அவனுள்ளும், நாட்டிலும் அறம் வளரும்; பாவங்கள் குறையும்.*

If a man, while seeking to speak usefully, speaks also sweetly, his sins will diminish and his virtue increase.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு - 788

*பலர் முன்னே ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது உடனே சென்று போக்குவதே நட்பு.*

(True) friendship hastens to the rescue of the afflicted (as readily) as the hand of one whose garment is loosened (before an assembly).